# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,048 — 1934 ம் ௵ வைகாசிமீ 11 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தொம்பேயில் மருந்து ஆஸ்பத்திரிக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 242. குறிச்சி—தொம்பே.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | மெடலன்டாவத்த .. | தென்னங்காணி, 7 தென்னையும், 1 பலாவும், 1 கஜுவும், ஒரு கட்டிய கிணறும், மருந்து ஆஸ்பத்திரியாகப் பாவிக்கும் ஓடு கால் வேய்ந்த ஓர் கட்டிட வீடும், ஒரு ஓடு கால வேய்ந்த மண் கக்கூசும் உள்ளது | எம். பி. பெலெனிஸ் பெறிரு, எம். பி. கென்டிறிக் பெறரு, எம். பி. அலிசா பெறிரு, எம். பி. பஸ்தியான பெறிரு, தொம்பேயிலுள்ளவர்கள் | 0 0 17·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம பிரிவின் ஏறபாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் என்க்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ௵ ஆடி மாசம் 7 ந் தேதியிலன்று காலை 9 மணிக்கு தொம்பே ஆண் பாடசாலையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1934 ம் ௵ வைகாசிமீ 4 ந் வ.

கார்ள் ஈ. ஆண்ட்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7ம் பிரிவின் பிரகாரம் டிக்கோயா—மஸ்கெலியா றோட்டில் சொக்மன் மூலையை அகலித்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 159. குறிச்சி—டிக்கோயா, கற்றன்—டிக்கோயா நகரசங்க எல்லைக்குள்,
கண்டி டிஸ்திறிக், மத்திய மாகாணம்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | — .. | பெரிய றோட்டு .. .. | டிக்கோயா ரீ கம்பனி லிமிட்டெட் | 0 0 3·77 |
| 2 | — .. | கல்மேடை .. .. | ஷை .. | 0 0 26·82 |
| 3 | — .. | ஷை .. .. | ஷை .. | 0 0 0·14 |
| 5 | — .. | ஷை .. .. | ஷை .. | 0 0 20·25 |
| 6 | வீட்டிலக்கம் 834 இன் பகுதி, (பொலிஸ் டேசன் வளவு) | பொலிஸ் டேசன் கட்டிடப்பகுதியும், கல்வாய்க்கால் பகுதியும், வளவும் உடையது | ஷை .. | 0 0 3·47 |
| 7 | — .. | அடிப்பாதை .. .. | ஷை .. | 0 0 0·40 |
| 8 | வீட்டிலக்கம் 833 இன் பகுதி, (டிக்கோயா தோட்டம்) | பாழ் நிலம் .. .. | ஷை .. | 0 0 2·07 |
| 9 | வீட்டிலக்கம் 832 இன் பகுதி, (டிக்கோயாதோட்டம்) | — .. | ஷை .. | 0 0 0·80 |
| 10 | — .. | கல்மேடை .. .. | ஷை .. | 0 0 10·17 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934ம் ஆண்டு (ஜூன்) ஆனிமாசம் 22ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி, 1934 ம் ஆண்டு மேமீ 8 ந் உ. — டீ. சீ. ஆர். குணவர்தன, உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் ஹிபங்கந்தயில் கவர்மெண்ட் ஸ்கூல் ஒன்று கட்ட என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 154. குறிச்சி—ஹிபங்கந்த.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | முக்மல்கஹவத்த அல்லது தலெவத்த | ஓலைமேய்ந்த ஸ்கூல் கட்டடமும் கக்கூஸும் ஓர் கிணறுமுள்ள தென்னந்தோட்டம் | விரிஸோமரத்னஹாமு துறவோ | 0 3 19·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்து காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1934 ம் ஆண்டு ஜூன் மாசம் 8 ந் தேதியிலன்று 10 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி, 1934 ம் ஆண்டு மேமீ 3 ந் திகதி. — ஜே. டீ. பிறவுண், அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ஆண்டு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கப்புவத்தை என்னும் இடத்தில் ஒரு பள்ளிக்கூடம் கட்டுவதற்கும் அதற்கு வேண்டிய பாதை திறத்தற்கும் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 144. குறிச்சி—வட்டக்கெதறமுல்ல (சோனகக் குறிச்சி), வெலிகம் கோறளை, மாத்தறை டிஸ்திரிக்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | கொடகொலாகே வத்தை | தென்னந் தோட்டம் | ரீ. எஸ். மயிஹானத்தும்மா, எம். எல். எம். இஸ்மேயில், யூ. எல். எம். ஷெரிவ்வா உம்மா (கப்புவத்தையிலுள்ளவர்கள்) | 0 0 35·1 |
| 2 | உஸ்னெக்கெத்த கொறதுவா | ஷை | ஐ. எல். எம். மரிக்கார், எம். கே. எம். இஸ்மேயில், எம். கே. காசிம், எம் கே. இபிறுஹிம், எம். கே. பாத்துமாநாச்சியா, ஐ. எல். எம். ஹபிபுநாச்சியா (கப்புவத்தையிலுள்ளவர்கள்) | 0 0 27·3 |
| 3 | கொஹிலாவத்தை | ஷை .. | ஐ. எல். எம். மரிக்கார், ஐ. எல். எம். ஹபிபுநாச்சியா, ஏ. பி. மொஹம்மது நாச்சா, எம். கே. எம். இஸ்மேயில், எம். எல். எம். இஸ்மேயில் (வட்டகெதறமுல்லையிலுள்ளவர்கள்) | 0 0 5·8 |
| | | | | 0 1 28·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆண்டு-த்து காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1934 ம் ஆண்டு ஜூன் மாசம் 21 ந் தேதியிலன்று காலை 11 மணிக்கு வெலிகம வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தறைக் கச்சேரி, 1934 ம் ஆண்டு மேமீ 5 ந் உ. — எல். எல். ஹன்றர், உதவி அரசாட்சி ஏசண்டு.

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

இத்தா லறிவிப்பது வடமாகாண ஏசண்டர் அல்லது உதவி ஏசண்டரால் யாழ்ப்பாணக் கச்சேரியில் பின்னுறச் சொல்லப்படும் துறை ஆயக்குத்தகை 1934ம் ஆண்டு வைகாசி மாதம் 22 ந் திகதி தொடக்கம் புரட்டாதி மாதம் 30 ந் திகதி வரைக்கும் விலைக்கு வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் 1934ம் ஆண்டு வைகாசி மாதம் 21 ந் திகதி திங்கட்கிழமை மத்தியானம் 12 மணியளவில் ஏற்கப்படும்.

காரைதீவு.

2. ரூபா 50 கச்சேரியில் அல்லது திறைசேரியில் கட்டியதற்கு அத்தாட்சியாக பெற்றுக்கொண்ட றிசீட்டுடன் ஒப்பந்தப் பத்திரங்கள் கேள்விக்காரரால் நேரே கொடுபட வேண்டும். கேள்விக்காரன் அல்லது விலைவைப்போன் தனது கேள்வியின்படி துறை ஆயக்குத்தகை விலைக்குக் கொடுக்கப்படுமென்று தீர்மானித்தவுடன் கேள்வித்தொகையின் பத்திலொரு பங்கைக் கட்டவும் விற்பனவு நிபந்தனைகளுக்குக் கையொப்பமிடவும், அல்லது தேவையென்று காணும் பிணையைக் கேட்கும் நேரம் கொடுக்கவும் தவறினால் ஒப்பந்தக்கேள்விக்காகக் கட்டிய பணமும் கேள்வித்தொகையின் பத்திலொரு பங்கின்பேரால் கட்டிய பணமும் இழந்துபோவதுமன்றி தனது பெயரையும் குத்தகைப் பொருத்தங்களின்படி செய்யத் தவறியவர்களின் இடாப்பிலும் பதிவுசெய்வதற்கு ஏதுவாகும். ஒப்புக்கொள்ளப்பட்ட கேள்விக்காரன் அல்லது விலைவைப்போன் விற்பனவு நிபந்தனைகளுக்குக் கையெழுத்திட்டபின் கேள்விக்காரர் கட்டிய பணம் திருப்பிக் கொடுக்கப்படும். தபால் மார்க்கமாக அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்களும் குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பின் கிடைக்கும் கேள்விப்பத்திரங்களும் கவனிக்கப்படமாட்டாது.

3. ஒப்புக்கொள்ளப்படும் கேள்விக்காரன் கேள்வித்தொகையிற் பத்திலொன்று காசாய் உடனே கட்டவேணடும். உத்தம தேசாதிபதியவர்களால் கேள்வி ஏற்கப்பட்டால் கேள்விக்காரன் தனக்கு அதைப்பற்றிய அறிவித்தல் கிடைத்த 20 நாட்களுள் அரைவாசித் தொகைக்கு அனுமதி பெற்ற ஆதனப் பிணையேனும் காசாய் கேள்வித் தொகையில் மூன்றிலொரு பங்கு பிணையேனும் கட்டவேண்டும்.

4. கவண்மேந்து ஏசண்டர் விற்பனவிலன்று தீர்மானிக்கிற பிரகாரம் பாதைகளைப் பழுதுபார்ப்பதற்கு வேண்டிய பணத்தைப் பிணையாகக் கேள்விக்காரன் கட்டவும் வேண்டும்.

5. முடிக்குரிய தரணிபிணையாகக் கொடுபடும் உறுதிமுதலியவைகளைப் பரிசோதிப்பதற்கும் ஒப்பந்த உறுதிபோடுவதற்கும் உரிய செலவு ஆதனங்களை விலைமதித்தல் முதலியவைகளால் வரும்செலவும் பிணைஉறுதிக்கு ஒட்டவேண்டிய முத்திரைச் செலவும் கேள்விக்காரன் கட்டவேண்டும்.

6. பிணையாகக்கொடுபடும் உறுதிகளிலுள்ள ஆதனங்கள் ஈடுமுதலியவைகட் குட்படவில்லையென்று கேள்விக்காரன் தன் செலவில் நிலப்பதிவு கந்தோரிலிருந்து ஓர் பத்திரம் பெற்றுக் கொடுக்கவேண்டும்.

7. யாழ்ப்பாண ஏசண்டரிடம் தேவையான மேலதிகமான விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம். போதிய கேள்விகள் கேட்கப்படாத குத்தகைகள் கேள்விப்பத்திரங்கள் திறந்து பரிசோதிக்கப்பட்டவுடன் அன்றையத்தினமே பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

எஸ். எம். டவ், கவுண்மேந்து ஏசன்றுக்காக.

யாழ்ப்பாணக் கச்சேரி, 1934 ம் ஆண்டு வைகாசிமீ 5 ந் உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.